புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஜுலை 18, 2024 • புரட்சி 24 • முழக்கம் 27 • விலை ரூ.3.00

# பெரியாரின் நாத்திகம் தமிழர் நலன் சார்ந்தது
# அய்யாவுடன் கைகோர்த்த குன்றக்குடி அடிகளார்!

**பெரியாரின் பகுத்தறிவு இயக்கத்திற்கு என்றென்றும் துணைநின்ற தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டு ஜுலை 11–ஆம் தேதி தொடங்கியுள்ளது. திராவிட மாடலின் அடித்தளமான ‘அனைவருக்கும் அனைத்தும்’ என்ற சமத்துவக் கோட்பாட்டில் உறுதியோடு இருந்த குன்றக்குடி அடிகளாரின் நூற்றாண்டை நினைவுகூர்ந்து அவருடைய மானுடப் பணிகளை போற்ற வேண்டியது திராவிட இயக்கத்தின் கடமை. குன்றக்குடி அடிகளார் குறித்து 2018ஆம் ஆண்டு நிமிர்வோம் இதழில் வெளியிடப்பட்ட கட்டுரையை அவருடைய நூற்றாண்டின் தொடக்கதில் பகிர்கிறது புரட்சிப் பெரியார் பெரியார் முழக்கம்.**



கடவுள் – மத மறுப்புகளைக் கடுமையாகப் பேசிய பெரியார், போராட்ட வடிவங்களிலும் கடுமையான அணுகுமுறைகளையே பின்பற்றினார். பார்ப்பனியத்தில் ஊறிப் போய் நிற்கும் மக்களுக்கு இத்தகைய ‘அறுவை சிகிச்சை’ முறையே தேவை என்று கருதினார் பெரியார். ஆனால், தமிழ்நாட்டில் கொள்கை முரண் பாடுகளுக்கிடையே உரையாடல்களைத் தொடங்கி விவாதங்களுக்கு வழி திறந்து விட்டதுதான் பெரியார் இயக்கம், மாற்றுக் கருத்தாளர்களை எதிரிகளாக்கி வன்முறைக்கு தூபம் போட்டது இல்லை. இன்று எச். ராஜாக்களும், இந்து தீவிரவாத அமைப்புகளும் பேசும் தரமற்ற வன்முறைப் பேச்சுகளை பெரியார் இயக்கம் எப்போதும் பின்பற்றியதும் இல்லை.

சைவத்திலும் பக்தியிலும் ஊறித் திளைத்த காவி உடை சாமியார் குன்றக்குடி அடிகளாரும் பெரியாரும் ஒரே மேடையைப் பகிர்ந்து கொண்டார்கள். அவரவர் நிலையிலிருந்து கருத்து மோதல்களை நிகழ்த்தினார்கள். தமிழர் இன நலன் என்று வரும்போது ‘கருப்பும் காவியும்’ ஒரே குரலில் ஒலித்தது. இந்த வரலாற்றை இளைய சமுதாயத்துக்கு நினைவூட்டுவதற்காக பெரியார் – அடிகளாருக்கிடையே நிலவிய உறவுகளை ‘நிமிர்வோம்’ பதிவு செய்கிறது.

“1945ஆம் ஆண்டு, 20 வயதே நிரம்பிய குன்றக்குடி அடிகள், தருமபுரம் சைவமடத்தில் சேர்ந்து, சைவ சித்தாந்தம், சங்க இலக்கியங்கள் மற்றும் சமஸ்கிருதத்தில் ஆழ்ந்த புலமைப் பெற்றார். அப்போது குன்றக்குடி, திருவண்ணாமலை சைவ மடத்துக்கு இளைய சாமியார் ஒருவரை தேடிக்கொண்டிருந்த போது, குன்றக்குடி அடிகளாருக்கு அழைப்பு விடுத்தது. தருமபுரம் மடம் அடிகளாரை அனுப்பி வைக்க மறுத்தாலும், பிறகு ஒரு வழியாக சம்மதித்தது. இளைய மடாதிபதியாக குன்றக்குடி மடத்தில் சேர்ந்த ஆதீனம், அடுத்த 3 ஆண்டுகளில் குன்றக்குடி மடாதிபதி ஆகி விட்டார். சைவத்தில் வெள்ளாளர் ஜாதியினர் மட்டுமே சைவ மடங்களில் சன்னிதானமாக முடியும். இவரும் அதே ஜாதிப் பிரிவைச் சார்ந்தவர்தான். ஆனால், சீர்திருத்த எண்ணங் களைக் கொண்டிருந்தார். மடத்துக்கு அருகே உள்ள தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு களுக்குச் சென்றார். ‘வழிபாட்டு மொழியாக தமிழ் இருக்க வேண்டும்’ என்றார்.

பெரியார், விநாயகன் எதிர்ப்பு, இராமன் எதிர்ப்பு இயக்கங்களை நடத்தியபோது, அதற்கு குன்றக்குடி அடிகளாரிடமிருந்து எதிர்ப்பு வந்தது. பெரியார் இயக்கங்களைக் கண்டித்து, துண்டறிக்கைகளை வெளி யிட்டார். பெரியார் இயக்கத்துக்கு எதிராக, “அருள்நெறி திருக் கூட்டம்” என்ற அமைப்பைத் தொடங்கி பெரியார் கடவுள் மத எதிர்ப்புக்கு எதிராக பிரச்சாரம் செய்தார்.

இந்த நிலையில் 1955இல் பெரியார் மலாயா (இப்போது மலேசியா) பயணமான போது, குன்றக்குடி அடிகளாரும் பெரியார் பிரச்சாரத்துக்கு மறுப்பு தெரிவிக்க மலேயா பயணமானார். இந்து மடாதிபதிகள் கடல் தாண்டக் கூடாது என்ற மரபையும் மீறி குன்றக்குடி அடிகளார் மலேயாவுக்கு சென்றது குறிப்பிடத்தக்கது. ‘நாத்திகர்களின் விஷமப் பிரச்சாரத்தை முறியடிக்கவே’ சம்பிரதாயங் களையும் மீறி கடல் தாண்டி கப்பலில் வந்ததாக கூறினார். மலாயாவில் தொடர்ச்சியாக பல கூட்டங்களில் பேசிய குன்றங்குடி அடிகளார், “சைவ மதத்தில் ஜாதிக்கு இடமில்லை; பல கடவுள் நம்பிக்கையையும் ஏற்கவில்லை” என்று அவர் பேசிய கருத்துகள் பெரியாருக்கு எட்டின. பெரியாருக்கு எதிராக பார்ப்பனரல்லாத ஒரு மடாதிபதி களமிறங்கியிருப்பது காஞ்சி பார்ப்பன மடத்துக்கு மகிழ்ச்சியூட்டியது. காஞ்சி மடம் குதூகலமடைந்தது. இந்த நிலையில் அடிகளாரின் ஜாதி எதிர்ப்பு கருத்து பெரியாரை ஈர்த்தது. தமிழகம் திரும்பிய பெரியார், குன்றக்குடி சன்னிதானம் மலேசியா வில் பேசியது பற்றி கேள்விப்பட்டவுடன் அவர் குறித்து விசாரித்தார்.

“அவர் நம்முடைய ஆள்; அவர் போட்டிருக்கிற வேடத்துக்காக நம்மை எதிர்த்து பேசி வருகிறார். தோழர்கள் அவருக்கு எந்த தொல்லையும் தரக்கூடாது” என்று தோழர்களுக்கு அறிவுறுத்தினார். ஒட்டு மொத்த தமிழர் நலனுக்காக பெரியார் – அடிகளார் முரண்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற பொதுவான சிந்தனைக்கு தோழர்கள், உணர்வாளர்கள் வந்தனர்.

இருவருக்கிடையே ‘நட்பு’ உருவாக வேண்டும் என்று விரும்பிய சிலர், ஈரோட்டில் இரு தலைவர்களுக்குமிடையே இரகசிய சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்தனர். அடிகளார் இருந்த வீட்டுக்கு பெரியார் சென்றார். இரண்டாவது தளத்தில் அடிகளார் இருந்தார். பெரியார் வருகை அறிந்து மாடியிலிருந்து கீழே இறங்கி வர அடிகளார் தயாரானபோது, பெரியார் தடுத்து, ‘சன்னிதானத்துக்கென்று ஒரு மரியாதை உண்டு; அதை குலைக்கக் கூடாது; நானே மேலே வருகிறேன்’ என்று கூறி, பெரியார் படி ஏறி 2ஆவது தளத்துக்குச் சென்றார். அடிகளார் எழுந்து நின்று பெரியாரை வரவேற்றார். பெரியார் எழுந்து நின்று வணக்கம் செலுத்திய போது, அவரது கைத்தடி கீழே விழுந்து விட்டது. ‘நீங்கள் அமருங்கள்’ என்று அடிகளாரிடம் கூறினார் பெரியார்.

இரண்டு பேர் அமரும் அந்த இருக்கையில் தனக்கு அருகே அமர பெரியாரை அடிகளார் அழைத்தபோது, பெரியார் மறுத்து, ‘சன்னிதானத்தோடு சமமாக அமருவது மரபு அல்ல’ என்று கூறினார். இத்தனைக்கும் அடிகளார் பெரியாரைவிட 50 வயது இளையவர். இருவரும் மனம் விட்டு பேசினர்.

மதமும், கடவுளும், ஜாதியையும் தீண்டாமையையும் நியாயப்படுத்தி, பார்ப்பன அடிமைகளாக பெரும் பகுதி மக்களை நிலை நிறுத்தியிருப்பதை பெரியார் ஆவேசத்துடன் கூறியபோது அடிகளார் அமைதியாக கேட்டார். “அப்பர், இராமலிங்க அடிகள், இராமானுஜர் கூறிய கருத்துகளை உண்மையாகப் பின்பற்றி இருந்தால் இந்த நிலை வந்திருக்காது” என்று வேதனையுடன் அடிகளார் கூறினார்.

“இதைத் தவிர எனக்கும் கடவுளுக்கும் இந்து மதத்துக்கும் வேறு என்ன தகராறு? நான் கடவுளை கண்ணால் பார்த்ததுகூட இல்லையே! பிறகு அவருடன் எனக்கென்ன பிரச்சினை?” என்றார் பெரியார். இருவருக்கும் தமிழர் இனமான உணர்வுக் கண்ணோட்டத் தில் புரிதல் உருவானது. 1956ஆம் ஆண்டு திருச்சி பொன்மலையில் பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்துக்கு திராவிடர் கழகத் தோழர்கள் அடிகளாரை அழைத்தனர். முதலில் தயங்கிய அடிகளார், பிறகு ஒப்புக் கொண்டார். அந்தக் கூட்டத்தில், திராவிடர் கழகத் தோழர் ஒருவர், மதத்தைக் கடுமையாக தாக்கிப் பேசியபோது, பெரியார் தனது கைத்தடியால் தட்டி, அடிகளாரை மேடையில் வைத்துக் கொண்டு அப்படி பேச வேண்டாம் என்று சைகையால் தடுத்தார். அந்தக் கூட்டத்தில் அடிகளார் பெரியாருக்கு ஒரு சால்வை போர்த்தினார். இது, இரு தரப்பினரிடையேயும் சலசலப்பை, விவாதங்களை உருவாக்கியது. அக்கூட்டத்தில் பெரியாரின் ஜாதி எதிர்ப்பு, கருத்துகளைப் பாராட்டிப் பேசிய அடிகளார், நாத்திக கருத்துகளை ஒவ்வொன்றாக மறுத்தார். பெரியார் தனது ஏற்புரையில் மிகவும் பெருந்தன்மை காட்டினார். “எங்களுடைய சமுதாயம் சூத்திரர் என்று இழிவுப்படுத்துவதற்கு இந்த கடவுளும் மதமும் காரணமாக இருக்கும்போது இதை ஒழிப்பதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது?” என்று கேட்டார். கூட்டம் முடிந்து இருவரும் ஒரே காரில் திருநெல்வேலி வரை பயணமானார்கள். தங்களுக்குள் கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் ஜாதி ஒழிப்பில் தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பில் இருவரும் இணைந்தே பயணித்தார்கள். குன்றக்குடி மடத்துக்கு அடிகளார் அழைப்பை ஏற்று பெரியார் சென்றார். யானை ஒன்று பெரியாருக்கு மாலை போட்டு வரவேற்றது. மடத்தின் ஊழியர் ஒருவர் பெரியாருக்கு விபூதி பூச முயன்ற போது, குன்றக்குடி அடிகளார் அதைத் தடுத்தார்.

1973இல் பெரியார் இறக்கும் வரை இந்த நட்புப் பயணம் தொடர்ந்தது” – என்று அந்தக் கட்டுரை பதிவு செய்திருக்கிறது.

1971ஆம் ஆண்டு சேலத்தில் இராமனை பெரியார் செருப்பாலடித்தார் என்று பார்ப்பனர்கள் ஒரு ‘பிரளயத்தை’யே உருவாக்கியபோது, அடிகளார் பெரியார் பக்கம் நின்றார். “இன்றைய நாத்திகம் தமிழர் நலன் சார்ந்தது; இன்றைய ஆத்திகம் உயர்ஜாதி நலன் சார்ந்தது” என்று வெளிப் படையாகவே அடிகளார் அறிவித்தார். குன்றக்குடி மடத்தின் நிர்வாகத்துக்கு உள்பட்ட கோயில்களில் அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகர் ஆக்கினார் அடிகளார். தி.மு.க. ஆட்சியில் அவருக்கு மேலவை உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது. கருப்பு உடையும் காவி உடையும் ஒரே மேடையில் இனவுணர்வுப் பிழம்பாக தோன்றிய காட்சிகள் திராவிடர் கழகத் தோழர்களுக்கு பெரும் உற்சாகத்தைத் தந்தது. அந்த மேடையில் அடிகளாரிடம் பெரியார் உரிமையோடு எழுப்பிய விவாதங்களும் அதற்கு அடிகளார், சிரித்துக் கொண்டே நாகரிகத்தோடு தனது பதிலை முன் வைத்த நிகழ்வுகளும் உண்டு. மாற்றுக் கருத்துகளை அங்கீகரிக்கவும், விவாதிக்கவும் கூடிய உன்னதமான தலைமைப் பண்பு பெரியாரிடம் இருந்தது. அடிகளார் அதை ஆழமாகப் புரிந்திருந்தார். அதுவே அவர்களின் நட்புக்கு அரண் சேர்த்தது.

**ஆய்வாளர் ஏ.ஆர். வெங்கடாசலபதி, 2016, செப்.16 ‘இந்து’ ஏட்டில் எழுதிய கட்டுரையின் சுருக்கமான தமிழாக்கம்.**

**நிமிர்வோம் செப் 2018 இதழ்**

## தலையங்கம்

# தனியார்துறை இடஒதுக்கீடு அவசியம்!

ஜவகர்லால் நேருவின் ஆட்சிக்காலம் தொடங்கி மன்மோகன் சிங் ஆட்சிக்காலம் வரையில் இந்தியாவில் 188 பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் நரேந்திர மோடி பிரதமரான பிறகு ஒரு பொதுத்துறை நிறுவனம் கூட புதிதாக உருவாக்கப்படவில்லை. அதற்கு மாறாக, பொதுத்துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றாக கூறுபோட்டு விற்கப்பட்டு வருகின்றன. 2025ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கை விற்று, 6 லட்சம் கோடி ரூபாய் நிதி திரட்ட வேண்டுமென்று 2 ஆண்டுகளுக்கு முன்பு இலக்கு நிர்ணயித்திருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. அதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் தேசிய பணமாக்கல் திட்டம் (National Monetisation Pipeline).

தற்போது மோடியின் மூன்றாவது ஆட்சிக்காலம் தொடங்கிய ஒருசில மாதங்களிலேயே தனியார்மயமாக்கல் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது. பாரத் பெட்ரோலியம் தனியார்மயமாக்கப்படவிருப்பதாக அறிவித்திருக்கிறார் ஒன்றிய பெட்ரோலியத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான். 2023-2024ஆம் நிதியாண்டின் முதல் அரையாண்டில் மட்டும் 19,000 கோடி ரூபாய் நிகர லாபம் ஈட்டியிருக்கிறது பாரத் பெட்ரோலியம். "வணிகம் செய்வது ஆட்சியாளர்களின் வேலையல்ல, அரசை நிர்வகிப்பது மட்டுமே ஆட்சியாளர்களின் வேலை" என்று பாஜகவினர் இதற்கு விளக்கம் கொடுக்கிறார்கள். அதற்காக வருணாசிரம தர்மத்தையும் துணைக்கு அழைக்கிறார்கள். சத்திரியர்களின் (ஆட்சியாளர்களின்) பணி ஆள்வதுதான். சரி, நிர்மலா சீதாராமனும், ஜெய்சங்கரும் தங்களை சத்திரியர்கள் என்று ஒப்புக்கொள்வார்களா என்று நாம் கேட்க வேண்டியுள்ளது. நாட்டின் சொத்துக்களை கூறுபோடும் இவர்கள் பேசும் தேசபக்தி எத்தனை போலியானது என்றும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

பொதுத்துறை சொத்துக்கள் அழிக்கப்படுகிறது என்பது மட்டுமே இதிலுள்ள சிக்கல் அல்ல. சமூக நீதியை படுகுழியில் தள்ளும் மற்றொரு ஆபத்தும் இதில் அடங்கியிருக்கிறது. பொதுத்துறை நிறுவனங்கள் ஒன்றிய அரசின் வசம் இருக்கும் வரையில்தான் இடஒதுக்கீட்டு அடிப்படையில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அதுவே தனியார்மயமாகிவிட்டால் இடஒதுக்கீட்டின் கட்டாயம் இருக்காது. போராடிப்பெற்ற இடஒதுக்கீட்டை ஒழித்துக்கட்ட தனியார்மயமாக்கலை ஓர் ஆயுதமாக பயன்படுத்திக்கொண்டிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு. அதனால்தான் தனியார் துறையிலும் இடஒதுக்கீடு வேண்டுமென்ற கோரிக்கையை திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ச்சியாக முன்வைத்துக் கொண்டிருக்கிறது.

ஏற்கெனவே ஆந்திரப் பிரதேசம், அரியானா, ஜார்கண்ட் மாநிலங்களில் தனியார் துறை இடஒதுக்கீட்டுக்கான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. தற்போது கர்நாடகாவிலும் அத்தகைய முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் கன்னடர்களுக்கே முன்னுரிமை அளிக்கும் சட்டம் ஒன்றுக்கு ஜூலை 15ஆம் தேதி கர்நாடக மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தச் சட்டத்தின்படி, தொழிற்சாலைகளிலும் பிற நிறுவனங்களிலும் நிர்வாகப் பதவிகளில் 50 விழுக்காட்டையும், மற்ற வேலைகளில் 70 விழுக்காடு பணியிடங்களையும் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு மட்டுமே நிரப்ப வேண்டும். வரும் வாரத்தில் மசோதா சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருந்த நிலையில், தொழில் நிறுவனங்களிடமிருந்து எழுந்த எதிர்ப்பால், மறு பரிசீலனை செய்யவிருப்பதாக முதலமைச்சர் சித்தராமையா அறிவித்திருக்கிறார்.

எந்த மாநிலத்தில் இத்தகைய முயற்சி எடுக்கப்பட்டாலும், தொழில் நிறுவனங்கள் அம்மாநிலத்தில் முதலீடு செய்ய முன்வர மாட்டோம், முதலீடுகளை திரும்பப் பெறுவோம் என்ற தொனியில் மிரட்டல் விடுப்பதை வாடிக்கையாகக் கொண்டிருக்கின்றன. சமூக சமத்துவம் குறித்தோ, சமநிலையைப் பேணுவது குறித்தோ தனியார் நிறுவனங்களுக்கு எந்தக் கவலையும் இருப்பதில்லை, இலாபம் ஒன்று மட்டுமே நோக்கமாக இருக்கின்றன. ஆனால் தனியார் நிறுவனங்களில் இடஒதுக்கீடு இல்லாததன் விளைவு எத்தகைய மோசமானதாக இருக்கிறது என்பதையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.

இடஒதுக்கீட்டை அமல்படுத்த மாட்டோம் என்று உறுதியாக இருக்கும் நிறுவனங்கள், வேலைக்கு விண்ணப்பம் பெறும்போதே விண்ணப்பதாரரின் ஜாதி அடையாளங்களையும் அறிந்து வைத்துக்கொள்கிறது. இதனால் முதல்கட்ட தேர்வுக்குப் பிறகு பட்டியல் சமூகத்தினருக்கு நூற்றுக்கு 33 பேருக்கு மட்டுமே அடுத்தக்கட்டத்திற்கான அழைப்பு வருகிறது. ஆனால் உயர்ஜாதியினருக்கு வெகு சிலருக்கு மட்டுமே அடுத்தக்கட்டத்திற்கான அழைப்பு கிடைப்பதில்லை. உயர்ஜாதியினருக்கு மிக எளிமையாக பதவி உயர்வு கிடைப்பதைப் போல, பட்டியல் சமூகத்தினருக்கு கிடைப்பதில்லை. தகவல் தொழில்நுட்பத் துறையில் கூட ஜாதி மிக மோசமாக கோலோச்சுகிறது. தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றும் 70 விழுக்காட்டினர் உயர் ஜாதி இந்துக்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. நிர்வாக மட்டத்திலான பொறுப்புகளில் பட்டியல் அல்லது பழங்குடி சமூகத்தினரை காண்பதே இன்னும் அரிதினும் அரிதான ஒன்றாகவே இருக்கிறது.

எனவே தனியார்துறையிலும் இடஒதுக்கீடு வழங்கப்பட்டால் மட்டுமே அனைத்து சமூகத்தினரும் உயர் பதவிகளை எட்ட இயலும். அதை கர்நாடக அரசைப் போல மொழியின் அடிப்படையிலானதாக சுருக்கி விடமால், மாநிலத்தின் இடஒதுக்கீடு அடிப்படையில் நடைமுறைப்படுத்த வேண்டும். தனியார் துறை இடஒதுக்கீட்டை இனியும் தாமதிப்பது சமூகநீதி கொள்கைக்கு எதிரானது. தமிழ்நாடு போன்ற திறன் செறிந்த ஊழியர்களை கொண்ட மாநிலத்தில், தனியார் துறை இடஒதுக்கீட்டினால் எந்த நிறுவனமும் பாதிக்கப்படப்போவதில்லை. இடஒதுக்கீட்டால் தகுதி திறமை பாதிக்கப்படும் என்ற பார்ப்பன பஞ்சாங்கத்தின் தொடர்ச்சியாகவே இதுவும் இருக்கிறது. எனவே சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களும் பங்களிப்பு செய்யும்போதே உண்மையான வளர்ச்சியை எட்ட முடியும். இது தனியார் துறைக்கும் பொருந்தும். எனவே தமிழ்நாடு அரசும் இதனைச் சிந்திக்க வேண்டும்.

# பள்ளிக்கல்வித்துறையை முடக்கும் ஒன்றிய அரசு!

*பி.எம். ஸ்ரீ திட்டத்தில் இணையாத மாநிலங்களுக்கு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்துக்கு அனுப்பப்படும் நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வருகிறது. இதனால் பள்ளிக் கல்வித்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த 2022ம் ஆண்டு செப்டம்பர் 5ல் பிரதமர் மோடியால் பி.எம். ஸ்ரீ பள்ளிகள் (வளரும் இந்தியாவுக்கான பிரதமரின் பள்ளிகள்) என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நாடு முழுவதிலும் பள்ளிகள் மேம்பாட்டுக்கு ரூ.27,360 கோடி செலவிடப்பட உள்ளது.*



*இதற்கு 60% நிதிச்சுமையை ஒன்றிய அரசும், 40% மாநில அரசுகளும் ஏற்க வேண்டும். ஒன்றிய அரசின் பங்காக ரூ.18,128 கோடி உள்ளது. இதன்மூலம் 14,500 பள்ளிகளில் சுமார் 1.87 கோடி குழந்தைகள் பலன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பி.எம் ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்த தயக்கம் காட்டுவதால், டெல்லி, பஞ்சாப் மற்றும் மேற்கு வங்கத்திற்கு சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்திற்கு அனுப்ப வேண்டிய நிதியை ஒன்றிய கல்வி அமைச்சகம் நிறுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பி.எம் ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு, கேரளம், டெல்லி, பஞ்சாப் மற்றும் மேற்குவங்கம் ஆகிய ஐந்து மாநில அரசுகளும் இன்னும் கையெழுத்திடவில்லை.*

*தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகள் தங்கள் விருப்பத்தை சுட்டிக்காட்டியுள்ள நிலையில், டெல்லி, பஞ்சாப் மற்றும் மேற்கு வங்கம் ஆகியவை மறுத்துவிட்டன. இதன் காரணமாக இத் திட்டத்திற்கு அனுப்ப வேண்டிய நிதியை நிறுத்த ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. கடந்த நிதியாண்டின் அக்டோபர்-டிசம்பர் மற்றும் ஜனவரி-மார்ச் காலாண்டுகளுக்கான எஸ்.எஸ்.ஏ திட்டத்திற்கான நிதியின் மூன்றாவது மற்றும் நான்காவது தவணைகளையும், நடப்பு நிதியாண்டின் ஏப்ரல்-ஜூன் காலாண்டிற்கான முதல் தவணையையும் மூன்று மாநிலங்களும் நிதி தரப்படவில்லை.*

*இதனால், நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்க அமைச்சகத்திற்கு பல கடிதங்கள் மற்றும் நினைவூட்டல்களை அனுப்பி இருந்தன. டெல்லி ரூ. 330 கோடி, பஞ்சாப் ரூ. 515 கோடி மற்றும் மேற்கு வங்கம் ரூ. 1,000 கோடிக்கு மூன்று காலாண்டுகளில் பெற வேண்டிய நிதிக்காக காத்திருக்கின்றன. நிதி நிறுத்தம் பற்றிய கேள்விகளுக்கு கல்வி அமைச்சகம் பதிலளிக்கவில்லை. ஆனால் மாநிலங்கள் எஸ்.எஸ்.ஏ திட்டத்தின் கீழ் நிதியை தொடர்ந்து பெற முடியாது மற்றும் திட்டத்தின் ஒரு பகுதியான பி.எம் ஸ்ரீ திட்டத்தை செயல்படுத்த முடியாது என்ற தகவல்கள் மட்டும் அதிகாரிகள் மூலம் தெரிய வந்துள்ளது.*

*டெல்லி மற்றும் பஞ்சாப் ஆகிய இரு மாநிலங்களும் ஆம் ஆத்மி கட்சியால் ஆளப்படும் நிலையில், "ஸ்கூல்ஸ் ஆஃப் எமினென்ஸ்" என்ற முன்மாதிரியான பள்ளிகளுக்கு ஏற்கனவே இதேபோன்ற திட்டத்தை செயல்படுத்தி வருவதால், அந்த மாநிலங்கள் பி.எம் ஸ்ரீ திட்டத்தில் பங்கேற்க மறுத்துவிட்டன. மேற்கு வங்கம் தங்கள் பள்ளிகளின் பெயர்களுக்கு 'பி.எம் ஸ்ரீ' என்று பெயர் சூட்டப்படுவதை எதிர்த்தது. மேற்கு வங்கத்தின் கல்வி அமைச்சர் பிரத்யா பாசு மற்றும் கல்விச் செயலாளர் மணீஷ் ஜெயின் ஆகியோர் எஸ்.எஸ்.ஏ திட்டத்தின் நிதியை விடுவிக்கக் கோரி ஒன்றிய அமைச்சகத்திற்கு கடிதம் எழுதியுள்ளனர். டெல்லி அரசும் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது.*

*ஜூலை 2023 முதல், ஒன்றிய அரசுக்கும் பஞ்சாப் அரசுக்கும் இடையே குறைந்தது ஐந்து கடிதங்கள் பரிமாறப்பட்டதாகவும் ஆவணங்கள் காட்டுகின்றன. இதில், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பஞ்சாப் முதல்வர் பகவந்த் மானுக்கு எழுதிய கடிதமும், மாநில அரசையும் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டது மற்றும் திட்டத்திலிருந்து விலகுவதற்கான தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியது. பஞ்சாபின் கல்விச் செயலர் கமல் கிஷோர் யாதவ், கடந்த மார்ச் 15 அன்று, இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக மாநிலம் இருக்க விரும்பவில்லை என்று ஒன்றிய அரசுக்குத் தெரிவித்துள்ளார்.*

*மாநிலம் ஏற்கனவே தனது சொந்த "ஸ்கூல்ஸ் ஆஃப் எமினென்ஸ்", "ஸ்கூல்ஸ் ஆஃப் ப்ரில்லியன்ஸ்" மற்றும் "ஸ்கூல்ஸ் ஆஃப் ஹேப்பினஸ்" ஆகியவற்றை தேசியக் கல்விக் கொள்கையுடன் இணைத்து செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். இப்படியாக, பி.எம். ஸ்ரீ திட்டத்தில் இணையாத மாநிலங்களுக்கு ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்துக்கு அனுப்பப்படும் நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வருகிறது. அதன்படி, கடந்த ஆண்டுக்கான 3வது மற்றும் 4வது தவணை நிறுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டிலும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்துக்கான நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருப்பதாகப் பள்ளிக்கல்வித் துறை வட்டாரத்தில் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சி, பகுதிநேர ஆசிரியர்களுக்கான சம்பளம், அரசு பள்ளிகளின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவது உள்ளிட்ட பணிகள் பாதிக்கப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.*

## மரபை உடைக்கும் கழகப் பெண்களுக்கு பாராட்டு

# இறுதி நிகழ்வுகளை முன்னின்று நடத்தும் பெண்கள்!

ஆரம்பத்தில், பெண் தோழர்கள் யாரேனும் இறக்கும் சூழலில், பெண் தோழர்களே அந்தச் சடலத்தை தூக்கிச் செல்வது என்று செயல்படுத்தினோம். இறந்தவருக்கு பெண் பிள்ளை இருந்தால், அவரைக் கொள்ளி வைக்கச் செய்தோம்

‘ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் சம உரிமை பெற, கல்வியே அடிப்படை’ என்று முழங்கிய பெரியார், பாலின பேதம் கடக்க வலியுறுத்திய கொள்கைகள், முன்னெடுப்புகள் பற்பல. அதையடுத்து, ஆணுக்கு இணையாக அனைத்திலும் தங்களின் உரிமைகளைத் தொடர்ந்து கைப்பற்றி வருகின்றனர், பெண்கள். என்றாலும், இன்றளவும் அவர்களால் அதிகம் பங்கு இயலாத ஒன்றாக இருந்து வருவது... வாழ்வின் வழியனுப்பலுக்கான இறுதி மரியாதை நிகழ்வுகள்தான். இன்றும் ஆண்கள் மட்டுமே பெரும்பாலும் அதில் புழங்குகிறார்கள். பெண்கள் தரப்பிலிருந்து, ‘நாங்களும் செய்தால் என்ன?’ என்ற கேள்வியே உரக்க எழுப்பப்படவில்லை.

இத்தகைய சமூகச் சூழலில்தான் அதி முக்கியத்துவம் பெறுகிறது, கொளத்தூரில் பெண்கள் குழு ஒன்று செய்து வரும் இறுதி மரியாதை நிகழ்வுகள் நடைமுறை. சேலம் மாவட்டம், கொளத்தூர் கிராமத்தில், பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட திராவிடப் பெண்கள் படையினர், இறந்தவர்களின் உடலைக் கையாள்வதில் இருந்து, சுடுகாட்டுக்குச் சுமந்து சென்று, அடக்கம் செய்வது வரை அனைத்தையும் செய்து, பெண்களுக்கு விழிப்புணர்வு ஊட்டி வருகின்றனர்.

**கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த, திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் சுதாவிடம் பேசினோம்.** “நான் கடந்த 19 வருஷங்களா, தோழர்கள் விடுதலை இராஜேந்திரன், கொளத்தூர் மணி தலைமையில இயங்கிட்டு இருக்கிற திராவிடர் விடுதலைக் கழகத்துல இணைஞ்சு பயணிச்சிட்டு வர்றேன். பெரியாரோட முதன்மையான கொள்கைகள், சாதி ஒழிப்பும், பெண்ணுரிமையும். ஒரு ஆணுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கோ, அதெல்லாம் பெண்ணுக்கும் இருக்குனு அவர் சொல்லியிருக்கார். இறுதி மரியாதை நிகழ்வுகளும் இதுக்கு விதி விலக்கில்ல.

ஒரு காலத்துல, பெண்கள் உடன்கட்டை ஏற சுடுகாட்டுக்குப் போயிட்டு இருந்தாங்க. அதையே ஏத்துக்கிட்ட, வேடிக்கை பார்த்த சமூகம், பெண்கள் யாராச்சும், இறுதி மரியாதை நிகழ்வுகளைச் செய்ய சுடுகாட்டுக்குத் தானும் வர்றதா கேட்டா, இப்பவும் ஏத்துக்கிறதில்ல. இந்தச் சூழலைதான், எங்க இயக்கத்தை சேர்ந்த பெண்கள் எங்க கிராமப்புறப் பகுதிகள்ல மாத்திட்டு வர்றோம்.

வீடு தொடங்கி இடுகாடு வரை இறுதி மரியாதை நிகழ்வுகளை பெண்கள் ஏன் செய்யக் கூடாதுனு கேட்டா, ‘அதெல்லாம் காலம் காலமா அப்படித்தான், எதிர்த்துக் கேள்வி கேட்கக் கூடாது’, ‘பெண்கள் இளகின மனசு உள்ளவங்க, இதையெல்லாம் அவங்களால மன திடத்தோடு செய்ய முடியாது’, ‘பொம்பளைங்க சுடுகாட்டுக்குப் போனா பேய், பிசாசு பிடிச்சுக்கும்’னு பல பதில்களை, பயமுறுத்தல்களை சமூகம் சொல்லும். ஆண் வாரிசு இல்லாத ஒருத்தருக்கு கொள்ளிவைக்க, அவருக்கு மகள் இருந்தும் அனுமதிக்காம, பங்காளிகளை அதைச் செய்ய சொல்ற வழக்கம் இப்பவும் இருக்கு. அந்தளவுக்கு ஏன் பெண்களை அந்தக் கடமைகள்ல இருந்து தள்ளி வைக்கணும்? இதையெல்லாம் இனியாச்சும் மாத்தணும். அதைத்தான் நாங்க செஞ்சிட்டு இருக்கோம். கொளத்தூர் பகுதியில, எங்களோட இந்த முன்னெடுப்பை ஒரு சமுதாயப் புரட்சியா பார்க்குறோம்” என்றார் பெருமையுடன்.



**இந்த முன்னெடுப்புக்கான ஊர்மக்களின் ஒத்துழைப்பு பற்றி, தோழர் சரஸ்வதியிடம் கேட்டோம்.** “எங்க கிராமத்துல, பெரியாரோட கொள்கைகளை ஏற்றுக்கொண்டவங்க வீடுகள்ல இதை செஞ்சுட்டு வர்றோம். எந்த ஒரு சீர்திருத்தமும் தன்னிடமிருந்து தொடங்கணும்னு சொன்னவர் பெரியார். அந்த வகையில, அவர் கொள்கைப்படி வாழ்ந்தவங்களும், அவங்க குடும்பத்தினரும் இதை நாங்க செய்யக் காரணமா இருக்காங்க. கடந்த 10 வருஷங்கள்ல, இதுவரை 30-க்கும் மேற்பட்டோரை நாங்க அடக்கம் செய்திருப்போம்.

நாங்க பெண்களா சென்று இறுதிச் சடங்குகள்ல பங்கெடுக்குறதுடன், உயிரிழந்தவங்களோட குடும்பத்தைச் சேர்ந்த பெண்களையும் இதுல இணைச்சிப்போம். உடலை அடக்கம் செய்றது, தகனம் செய்றதுனு அந்தப் பெண்களும் மன தைரியத்துடன் இதையெல்லாம் செய்ய முன்வர்றாங்க. குறிப்பா, முன்னைவிட இந்த பங்களிப்பு அதிகரிச்சுட்டே வருது. இதைத்தான் எங்களோட வெற்றியா பார்க்குறோம்” என்றார் வார்த்தைகளில் உறுதி தெறிக்க.

**இறுதி மரியாதை நிகழ்வு அனுபவங்களை நம்மிடம் பகிர்ந்துகொண்ட தோழர் காயத்ரி,** “துக்க வீட்டில் ஊரும் உறவுகளும் கூடியிருக்கும் சூழல்ல, நம்மை இங்க இவங்க எல்லாம் அனுமதிப்பாங்களானு தயங்காம, நாங்களே எங்களுடைய உரிமையை எடுத்துட்டு, சடலத்தைக் கையாள்வது, தூக்கி சுமந்து சுடு காட்டுக்குக் கொண்டுபோறது, அடக்கம் செய்றதுனு எல்லா வேலைகளையும் பார்ப்போம். சம்பந்தப்பட்ட குடும்பத்தினரும் எங்களுக்கு பக்க பலமா இருப்பாங்க. உயிரிழந்த இயக்கத் தோழருக்கு, நெத்தியில பொட்டு வைக்கிறது, காசு வைக்கிறது, தலைமாட்டுல விளக்கு வைக்கிறதுனு எந்த சம்பிரதாயங்களையும் நாங்க செய்யுறது கிடையாது. ‘அந்தச் சடங்கெல்லாம் ஆதிகாலம் தொட்டு செஞ்சுட்டு வர்றது, அதை நீங்க மாத்தக் கூடாது’னு சொல்லுவாங்க சிலர். ஆனா, ஆதி காலத்தைவிட இப்போதான் மூடநம்பிக்கைகள் அதிகமா பின்பற்றப்படுது. மூட நம்பிக்கைகளை எல்லாரும் விட்டொழிக்கணும்” என்று பெரியாரின் குரலாகச் சொன்னவர்,

“சிலர் எங்ககிட்ட, ‘சுடுகாடு வரைக்கும் போயிட்டு வந்திருக்கீங்க, காத்து, கறுப்பு அண்டப் போகுது, செத்துப் போனவங்க பேயா வந்து உங்களப் புடிச்சுக்கப் போறாங்க’, ‘உங்களுக்குப் பயமா இருக்காதா?’, ‘நைட் எப்படி திகில் இல்லாம தூங்குறீங்க?’னு பலதும் கேட்பாங்க, சொல்வாங்க. ‘பேயை நம்புறவங்கதான் பேயை நினைச்சு பயப்படணும். நாங்கதான் பேய்னு ஒண்ணு இருக்கிறதா நம்பவே இல்லையே? மனுஷன் பொறந்தா இறக்கணும்ங்கிறது விதி. நாளைக்கு நமக்கும் இதே நிலைதான்...’னு கொஞ்சம் பக்குவமா சொல்லுவோம்” என்கிறார் நிதானத்துடன்.



**திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் இது குறித்துப் பேசினோம்.** “தமிழ்ப் பண்பாட்டில் பெண்களுக்கு உரிய இடம் உண்டு. ஆரியப் பண்பாடு, இந்து மதம் வந்த பிறகு பெண்கள் அனைத்திலும் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். இறந்தவர்களின் மனைவி, மகள் கூட சுடுகாட்டுக்கு வரக் கூடாது என்று சொல்லப்பட்ட சூழலில், நாங்கள் அதை மறுக்கின்ற அடிப்படையில்தான் இந்தப் பழக்கத்தை தொடங்கினோம்.

ஆரம்பத்தில், பெண் தோழர்கள் யாரேனும் இறக்கும் சூழலில், பெண் தோழர்களே அந்தச் சடலத்தைத் தூக்கிச் செல்வது என்று செயல்படுத்தினோம். இறந்தவருக்கு பெண் பிள்ளை இருந்தால், அவரை கொள்ளி வைக்கச் செய்தோம். என் அம்மா இறந்தபோதுகூட, என் தங்கைதான் கொள்ளி வைத்தார். நீண்ட காலமாக இந்த நடைமுறைகளைத் தொடர்ந்து வந்ததன் விளைவாக, இப்போது ஆண் தோழர்களின் இறுதி நிகழ்வுகளிலும் பெண்கள் பங்கேற்க முன்னுரிமை கொடுக்கப்படுகிறது” என்றார்.

**நெருப்பு வளரட்டும்!**

**நன்றி : அவள் விகடன்,30.07.2024**

## அம்பலமாகும் பி.எம்.கேர்ஸ் மோசடிகள்

கொரோனா தொற்று பரவல் உச்சத்தில் இருந்தபோது கடந்த 2021ம் ஆண்டு மே 29ம் தேதி சிறுவர்களுக்கான பிஎம் கேர்ஸ் நிதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலமாக 2020ம் ஆண்டு மார்ச் 11ம் தேதி முதல் 2023ம் ஆண்டு மே 5ம் தேதி வரை கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளைத் தத்தெடுப்போர் அல்லது பாதுகாவலர்களுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படும். இந்த திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தவர்களில் 51சதவீத மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் பகிர்ந்துள்ள தரவுகளின்படி, 33 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 613 மாவட்டங்களில் இருந்து மொத்தம் 9331 மனுக்கள் பிஎம் கேர்ஸ் திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 32 மாநிலங்களில் 558 மாவட்டங்களில் இருந்து 4532 விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 4781 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது. 18 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது. நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என தெரியவந்துள்ளது.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# “கொள்கைக் களமான கோவை!”

கோவை மாநகர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் 14.07.2024 அன்று கோவை ஆர்.எஸ்புரம், தடாகம் ரோட்டிலுள்ள திருமூர்த்தி லேஅவுட்டில் ஒரு நாள் பெரியாரியல் பயிலரங்கம் நடைபெற்றது.

இதற்கு கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமசந்திரன் தலைமை தாங்கினார். பயிலரங்கின் நோக்கம் குறித்து மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் விளக்கிக் கூறி வரவேற்புரையாற்றினார்.

பயிலரங்கைத் தொடங்கி வைத்து கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி உரையாற்றினார்.

தோழர்கள் அறிமுகத்திற்கு பின் “பார்ப்பனரல்லாதாரின் வளர்ச்சிக்கு வித்திட்ட வகுப்புவாரி பிரதிநிதித்துவம்” என்ற தலைப்பில் கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், வகுப்புரிமை வரலாற்றையும் பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாதார் உரிமை மறுக்கப்பட்டதற்கு எதிராக திராவிடர் இயக்கம் செய்த பணிகளையும், உரிமைகளைக் கற்றுக்கொடுத்த தலைவர்களின் உறுதித் தன்மையையும் விரிவாக எடுத்துக் கூறினார்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு பெரியாரியலாளர் சிற்பி இராசன் “மந்திரமல்ல தந்திரமே!” அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார். சாமியார்களின் மோசடிகளையும் மக்களின் மூடநம்பிக்கைகளையும் விளக்கினார். அறிவியல் மனப்பான்மையோடு நாம் வாழப் பழகிட வேண்டும் என்பதை விளக்கினார்.

நிறைவாக “சுயமரியாதை இயக்கத்தின் தாக்கமும்; பெரியார் தொண்டர்களின்









உப்பிலிபாளையம் நிலவழகன் கழகத் தலைவர் முன்னிலையில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

அர்ப்பணிப்பும்” என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். அவரது உரை பெரியார் - சுயமரியாதை இயக்கம் - பெரியார் தொண்டர்களின் அர்ப்பணிப்புகள் குறித்து புதிய தோழர்களுக்கு எளிமையாக புரியும் வண்ணம் அமைந்தது.

தலைவர் உரைக்கு பின் கேள்வி பதில் நிகழ்வில் புதிய தோழர்கள் எழுதிக்கொடுத்த வினாக்களுக்கு விரிவாக பதில் அளித்தார்.

நிறைவாக பயிலரங்கில் பங்குபெற்ற தோழர்கள் தாங்கள் கற்றுக் கொண்ட செய்திகள் குறித்து பகிர்ந்து கொண்டனர்.

இயக்க தோழர்களின் அணுகு முறை சிறப்பாக செயல்பட்ட விதம் குறித்தும் மனநிறைவான பயிலரங்கமாக அமைந்ததாக பயிலரங்கில் கலந்து கொண்ட தோழர்கள் பாராட்டு தெரிவித்தனர். மாநகரச் செயலாளர் வெங்கடேசன் நன்றி கூற பயிலரங்கம் நிறைவு பெற்றது.

கோவை மாநகர் மாவட்டக் கழகத் தோழர்கள், கழக ஆதரவாளர்கள் என நாற்பது தோழர்கள் கலந்து கொண்ட பயிலரங்கம் கொள்கைக்களமாக மாற்றியது.

தோழர்கள் நிர்மல்குமார், வெங்கட், கிருஷ்ணன், ஸ்டாலின், மாதவன், சதீஸ் மற்றும் தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

விடியல் பதிப்பகம் சௌந்தர் கட்டணம் ஏதுமின்றி தனது அரங்கத்தை வழங்கி பயிலரங்கம் வெற்றி பெற உதவினார்.

**செய்தி:**
**சூலூர் இரா.பன்னீர்செல்வம்**
**மாவட்டச் செயலாளர், கோவை**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

# அழகேந்திரன் ஆணவப் படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



விருதுநகர் அழகேந்திரன் ஆணவப் படுகொலையைக் கண்டித்தும், ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக தனிச்சட்டம் ஒன்றை இயற்றக் கோரியும் 15.07.2024 அன்று மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மதுரை மாவட்டக் கழகச் செயலாளர் மா.பா.மணி அமுதன் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி வரவேற்புரையாற்றினார். மாவட்டக் கழக காப்பாளர் தளபதி முன்னிலை வகித்தார்.

மேலும் ஆர்ப்பாட்டத்தின் கோரிக்கையை வலியுறுத்தி சேலம் மாநகரக் கழகத் தலைவர் பாலு, திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி, சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் பெரியார் முத்து, தேனி மாவட்ட அமைப்பாளர் தேனி ராயன், ஆதித்தமிழர் கட்சி மாவட்டச் செயலாளர் சந்துரு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் வெ.கனியமுதன், ஆதித்தமிழர் பேரவை மாநிலப் பொதுச் செயலாளர் கோவை ரவிக்குமார் உள்ளிட்டோர் பேசினார்கள்.

நிறைவாக கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் கண்டன உரையாற்றினார். அவர் பேசுகையில் “தொடர்ந்து தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஜாதி ஆணவப் படுகொலைகள் நடைபெற்று வருகிறது. இந்த குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரி கழகம் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகிறது. திமுகவை ஆதரித்து பரப்புரை செய்த பெரியார் தொண்டர்களாகிய நாங்கள் “ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான தனிச் சட்டம்” இயற்றக் கோரிக்கை வைக்கிறோம். இயற்றப்படும் தனிச் சட்டத்தின் மூலம் ஆணவப் படுகொலைகளுக்கு துணை போகும் ஜாதி சங்கங்களின் ஜாதி வெறி செயல்பாட்டிற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அமைய வேண்டும், திராவிட மாடல் அரசு இதனைப் பரிசீலனை செய்ய வேண்டும்” என்று பேசினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சேலம், திருப்பூர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து கழகத் தோழர்களும், விடுதலை சிறுத்தைகள், ஆதித்தமிழர் பேரவை, அதிமுக, ஆதித்தமிழர் கட்சி, பழங்குடி தமிழர் இயக்கம் உள்ளிட்ட தோழமை இயக்கத் தோழர்களும் திரளாகப் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : July 18, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran